ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

முன்யுகங்களில் பிராணிகள் ஞானாதி குணங்கள் நிறைந்த பெரியோர்களிருப்பார்களென்றும், அவர்களிடம் சிஷ்ப்படிந்து தெரியாத சூக்ஷ்மவிஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றும், பெரியோர்கள் புனிதமான பொது நலத்திற்காகவே பாடுபட்டுக் கண்டுபிடித்ததைப் பிறருக்குபதேசிப்பார்களென்றும், அதனால் எங்கும்க்ஷேமமும் ஸுபிக்ஷமுமுண்டாகுமென்று நம்பி—பெரியாரைக் கண்டவிடத்து வணங்கி குணத்தையே கிரஹித்துக்கொண்டு ஸௌக்யமாய் வாழ்ந்துவந்தார்களென பூர்வீகர்களது சரித்திரங்களிலிருந்து தெரியவருகிறது. 5000-வருஷங் கடந்த இக்கலியிலோவெனில் எல்லா ஜனங்களும் தானே தம்மைப் புகழ்ந்துகொண்டு, தாமே பெரியவரென்றும், தமக்குத்தோன்றியதெல்லாம் சிறந்ததேயென்றும் தாம் செய்வதெல்லாம் பொது நலத்திற்கேயென்றும், பெரியோரெனப் புகழப்படும் புண்ணியாத்துமாக்களாகிய மன்னுவாதிகளான முன்னோர்கள், உண்மையறிந்தவர்களில்லையென்றும், ஒரு ஸமயம் உண்மையறிந்தவர்களாயினும் அதை வெளியிடாமல் தன் பெருமையையே பெரிதாக நினைத்து ஜனங்களை வஞ்சித்துவிட்டார்களென்றும் தோன்றியபடியெல்லாம் தங்கள் கோஷ்டிகளில் ஸ்பஷ்டமாக சொல்லிக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள். ஜாதிப்பிரிவினை ஏற்படுத்தி வகுப்புச்சண்டையைக் கிளப்பிவிட்டார்களென்று அவர்கள் மீது அபாண்டமான பழியைச் சுமத்துகிறார்கள். ஜாதிப்பிரிவினையே இல்லாவிடில் சண்டைச் சச்சரவு ஏற்படாதென்று தற்காலத்தியவர்கள் நினைத்திருக்கிறார்கள், ஒரேவகுப்பிலிருப்பவர்கள். ஒரு விஷயத்திலாசைப்பட்டு வியாஜ்யம்—வியவஹாரம்செய்துகொண்டு கோர்ட்டு வாசல்களிலும், வக்கீல் வீடுகளிலும் திண்டாடி நிற்பதை இவர்கள் பார்க்கவில்லைபோலும். சிறிதுகாலம் ஒற்றுமையோடு ஒருவிஷயத்திலுழைத்தவர்கள் ஓர் சிறிய அபிப்பிராய பேதத்தால் பரஸ்பரம் விரோதத்தையடைந்து அந்த கார்யத்தையே கெடுத்துவிடுகிறார்கள். இதற்கு ஜாதிபேதமா காரணம். இல்லை. ஆனால் அபிப்பிராயம் வேறுபடுவதுதான் காரணம். வர்ணாசிரமப் பிரிவினையைத் தூஷிப்பவர்களும் ஜாதி பேதத்தால் தூஷிக்கவில்லை. ஒரே பிராமண ஜாதியிற்பிறந்தவரே பிராமண ஜாதியையழிக்க உபாயந்தேடுகிறார். என்றால் அங்கு ஜாதிபேதம் காரணமாயில்லை. வெவ்வேறு ஜாதியென நினைத்துக்கொண்டிருப்பவர்களும் ஒரே அபிப்பிராயம்கொண்டு ஒரு கம்பெனியை ஆரம்பித்து நடத்தி க்ஷேமத்தை அடைகிறார்கள்; ஜாதி வித்தியாஸத்தால் கெடுத்துவிடுவதில்லை. ஆகவே ஆங்கு அபிப்பிராய பேதந்தான் காரணம். ஆகையால் பெரியோர்கொண்ட அபிப்பிராயமே நமக்கும் தோன்றிவிடுமானால் ஒரு விரோதமும் நேரக்காரணமில்லை. அதனால் அந்த அபிப்பிராயப்படி எல்லோரும் ஒற்றிருந்து அவர்களுடைய உபதேசப்படி நடந்து க்ஷேமத்தை அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்;

# ஆர்யதர்மம்,

ப்ரஜாபதி-ஹு ஆவணிமீ ௧௧௨


## சுருதிஸ்மிருதிபுராணங்களும் அவைகளைப் பழிக்கும் பிராம்மணாதிகளும்

ஐய, இந்த வேதசாஸ்திர முதலியகலைகளின் கிரந்தசங்கியை அநேககோடிகளாகிறது. இவ்வளவு சங்கியையென்று கூறுதல் கூடாது. இவைகளெல்லாம் கீர்வாண பாஷையில்மட்டுமல்ல தென்மொழியிலும், (திராவிடபாஷையிலும்) மாராஷ்டிரம், கன்னடம், மலையாளமுதலிய பிராகிருத பாஷையிலும் எண்ணிறந்த நூற்கட்செய்யப்பட்டுள்ளன. ஆனால் அவைகள் கீர்வாணபாஷையைமூலமாகக் கொண்டதென்பது சொல்லாமலே அமையும். இஃதன்றி ஜோதிடத்தில் நவக்கிரஹங்களையும் திதிவாரநக்ஷத்திரயோககரண முதலியவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தேவதாஸ்வரூபமாகக்கூறி அச்சாஸ்திரத்தை சகலதேவதாரூபியான பரமேசுவரஸ்வரூபமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. அதுபோலவே மற்ற ஒவ்வொரு சாஸ்திரத்திலும் அததற்குள்ள அங்கங்களை தேவதாஸ்வரூபமாகவும் அச்சாஸ்திரங்களை பிர்ம சுரூபமாகவும் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் சுருதிஸ்மிருதி புராண முதலிய வுண்மை நூல்கள் ஆஸ்திக மதத்திற்கு முக்கியப்பிரமாணமாம். ஆதலாற்றான் வைதிக வேதியர் தினந்தோறுஞ்செய்யும்பிர்ம யஞ்ஞத்தில் தேவரிஷி பித்ருதர்ப்பணமியற்றுங்கால் நான்குவேதங்கள் இதிஹாஸ புராணங்கள், கல்பம், இவைகட்குந் தர்பணஞ் செய்யும்படி விதித்திருக்கின்றது. இவ்வுண்மைகளை உணரப்பெறாத பாமரர்கள் கலிகாலத்துக்குப்புத்திரர்களாக வேற்பட்டு ஸன் மார்க்க சீலர்களைப் பழிகூறவும், வேதசாஸ்திரங்களைக் கட்டுரை என்று உரைக்கவும் சமர்த்தர்களாயினார்.

இவ்வேத சாஸ்திரங்களில் ஸகுண நிர்குண ப்ரம்மஸ்வரூபத்தையும், அதன்பிரபாவத்தையும், பிரபஞ்சத்தின் ஸிருஸ்டிஸ்

திதிசம்ஹாரக்கிரமங்களேயும் அந்தணர் முதலிய வர்ணுசிரம தர்மங்களேயும் இராஜ நீதிகளேயும், தாயபாகாதி விவாங்களேயும் நன்மை தீமைகளேயும், விதிவிலக்குகளேயும், அவைகளேச் செய்கிறவர்கள் பெறுமின்ப துன்பங்களேயும், ஆசாரம் பிராயச்சித்தாதி முறைகளேயும், யோகசாதனஞ் செய்யவேண்டியவிதிகளேயும், ஞானமார்க்கத்தையும், இதன்றி இன்னும் எதெது மானிடருக்கு வேண்டுமோ அவையனைத்தும் ஸாங்கோபாங்கமாய்க் கூறப்பட்டுளது.

இதுகாறும் வேதத்தைப்பற்றி சிறிதுவரைந்தாம். இனி ஸ்மிருதி யென்னும் தர்மசாஸ்திரத்தைப்பற்றி வரைகின்றனம் ஐய, ஸ்மிருதிகளென்னும் தர்மசாஸ்திரங்களே மேதாவிகளாயும் தபோ நிஷ்டர்களாயுமுள்ள மநுபாராசர் முதலிய முன்னேர்கள் பிரஜைகளினது நன்மையைக்கருதி அருளிச்செய்தனர். இதில் கிருஷி, வியாபாரம், விதிநிஷேதம்,நீதி, முதலியநன்மைகள் நன்கு விரித்துரைக்குமென்பதை அறியாதாரெவருளர்?

आयस्ते विपुलः कश्चित्कश्चिदल्पपरो व्ययः ।
अपात्रेषु न ते कश्चित् शोकश्चरति राघव ॥
सद्भिरेव सहासीत सद्भिःकुर्वीत सङ्गमम् ।
सद्भिर्विवादं मैत्रींच्च नासद्भिः किंचिदाचरेत् ॥
महत्सेवां द्वारमाहु र्विमुक्तेः तमोद्वारं योषितां साङ्गिसङ्गम् ।
अकरुणत्वमकारणविग्रहः परधने परयोषिति च स्पृहा ॥
सुजनबन्धु जनेष्वसहिष्णुता सहजसिद्धमिदं हि दुरात्मनाम् ।
वांछासज्जनसङ्गतौ परगुणेप्रीतिर्गुरौनम्रता
विद्यायां व्यसनं स्वयोषिति रति र्लोकापवादाद्भयम् ।
भक्तिश्शूलिनि शक्तिरात्मदमने संसर्गमुक्तिः खलैः
एते येषु वसन्ति निर्मलगुणास्तेभ्यो महद्भयो नमः ॥
परस्वभावकर्माणि न प्रशंसेन्न गर्हयेत् अहिंसापरमोधर्मः ॥

என்று பெறப்பட்ட வாக்கியங்கயால் அனியாயமாய்ப் பொருள் சம்பாதிக்க வேண்டாம். அக்கிரமமாய் பொருள் சிலவிடவேண்டாம். பிறர்பொருள் பாதாரம் இவைகளே ஸ்மரிக்க வேண்

டாம். பிறருக்குத் துன்பம் விளைவித்தல் பிறனைப்பழித்தல் முத லிய துஷ் கிருத்தியங்களைச் செய்யவேண்டாம். அஸத்தியமுரைக் கவேண்டாம், சக்திக்குத் தக்கபடி தானதரும பரோபகாரங்களைச் செய், ஈசுவரபக்தி எக்காலுமிருக்கவேண்டும். மறுமையில் நர காதி துக்கங்களை அனுபவிக்கவேண்டியிருக்குமென்கிற நினைவு உனக்கெக்காலுமிருக்கவேண்டும். இதுபோல் அநேகம் நல்வழி கள் நிரூபிக்கப்படுகின்றன. இவைகளை ப்ரமாணமில்லையெனப் பழித்துபாபத்தை அடையாதீர்கள். அவை விதித்தபடி நடந்து க்ஷேமத்தையடைவீர்களாக. சுபம்.

பத்திராதிபர்.

---

# அத்வைதமதமே வைதிகம்.

(621-வது பக்கத்தொடர்ச்சி)

தர்மம் அர்த்தம்என்று கூறியதற்கு மற்றொரு அபிப்ராயமும் உண்டு அதாவது

यथेक्षुहेतोस्सलिलं निषेचितं तृणानि वल्लीरपि च प्रसिञ्चति ।
एवं नरो धर्मपथेन वर्तयन् यशश्च कामांश्च वसूनि सोऽश्नुते ॥

எவ்விதம் கரும்பின்பொருட்டு விடப்பட்ட ஜலமானது ஆனுஷங் கிகமாகப் புல் கொடி முதலியதுகளையும் நனைத்து அதுகளையும் விருத்தியடையச் செய்கின்றதோ அதுபோல் மனுஷ்யன் நித்யம் நைமித்திகம் முதலிய தர்ம மார்க்கத்தால் நடந்துகொண்டு ஆனு ஷங்கிகமாக யசஸ்ஸு காமம் அர்த்தம் இவைகளையும் அடை கின்றான்

धर्मादर्थश्च कामश्च ।

"தர்மத்தால் அர்த்தமும் காமமும்ஏற்படுகின்றது" என்பதுமுதலிய ஸ்மிருதி வசனங்களால் தர்மமானது அர்த்தம்காமம் இரண்டுக்கும் காரணமாகக் கூறப்பட்டிருந்தாலும் அர்த்தத்திற்கு ஸாக்ஷாத்தா கவும் (நேரிலும்) காமத்துக்குஅர்த்தத்தின்மூலமாகப் பரம்பரையா கவும் காரணமாகின்றது. காமத்துக்கு தர்மம் ஸாக்ஷாத்தாகக் காரணமாகிறதில்லை. ஏனெனில் காமமென்பது விஷயங்களா

லுண்டாகிய வைஷயிகஸுகம். அது விஷயமாகிய அர்த்தத்தால்தான் ஸாக்ஷாத்தாக உண்டாகக்கூடியது. அந்த அர்த்தம் தர்மத்தால் ஸாக்ஷாத்தாக உண்டாகக்கூடியது ஆதலால் தர்மம் அர்த்தத்தை உண்டுபண்ணி அதன்மூலமாகத்தான் காமத்தை உண்டாக்குகின்றது. அவ்விதமில்லாமல் தர்மத்தினுல் அர்த்தமாகிய விஷயம் உண்டாகாமல் திடீரென்று ஆகாசத்திலிருந்து பழம் விழுவதுபோல் காமம் உண்டாகின்றதில்லை. ஆகையால் தர்மம் காமத்தை உண்டாக்குவதற்கு மத்தியில் அர்த்தம் துவார காரணமாம். யாகம் அபூர்வத்தின் துவாராவாக ஸ்வர்க்கத்தை உண்டுபண்ணுவதுபோலும் தண்டம் சக்ரப்பிரமணத்தின் துவாராவாக குடத்தை உண்டுபண்ணுவதுபோலும்தர்மம் அர்த்தத்தின்துவாராவாகக் காமத்தை உண்டுபண்ணுகின்றது.

प्राक्तनसुकृतसपरत्यधीन विषय विशेषसंपर्कप्रयुक्त सत्वोत्कर्षरूप शुद्धितारतम्ययुक्त सुखरूपान्तः करणवृत्तिप्रतिबिंबितः स्वरूपानंदएव विषयान्दइत्युच्यते ॥

பூர்வ ஜன்மங்களில் செய்யப்பட்ட புண்ய கர்மங்கள் பலத்தைக் கொடுக்க அபிமுகமாகப் பரிபக்குவாவஸ்தையை அடையும் பொழுது ஸ்ரக்சந்தனம் வனிதை முதலிய இதைவிட அந்தவிஷயம் உயர்ந்தது அதைவிட மற்றென்று ரொம்பவும் உயர்ந்தது என்று சொல்லும்படியான பலவித உத்கர்ஷ தாரதம்யத்தோடு கூடிய நல்லவிஷயங்கள் கிடைக்கின்றன. அப்பொழுது அவ்வித விஷயங்களோடு அந்தந்த விஷயாகாரமான மனேவிருத்தியின் மூலமாக அந்தக் கரணத்திற்கு ஸம்பந்தமேற்படுகின்றது. அக்காலத்தில் திரிகுணமாகிய அந்தக் கரணத்திலுள்ள ஸத்துவ குணமானது உத்கிருஷ்டமான விஷயத்தின் ஸம்பந்தத்தால் உத்கர்ஷத்தையும் நிகிருஷ்டமான விஷயத்தின் ஸம்பந்தத்தால் நிகர்ஷத்தையும் அடைகின்றது அதனுல் அவ்வித அந்தக் கரணத்திலுள்ள ஸத்துவகுணத்தின் பரிணமமாக ஏற்படுவதும் ஸ்வரூபானந்தத்தை விஷயீகரிப்பதும் ஸ்வரூபானந்தத்தைப் பிரகாசிக்கச் செய்வதாலேயே ஸுகரூபங்களென்று வியவஹரிக்கப்படுவதுமான மனேவிருத்திகளும் தமது காரணமான ஸத்துவகுணத்தின் உத்கர்ஷாபகர்ஷங்களை அனுசரித்து உயர்வு தாழ்வாகிய சுத்தி தாரதம்யத்தோடு கூடவே உண்டாகின்றன. அவ்வித மனே

விருத்திகளில் ஸ்வரூபானந்தமானது உபாதி தாரதம்யத்தால் தாரதம்யத்துடன் பிரதி பிம்பிக்கின்றது அதுவே தாரதம்யத் துடன்கூடிய விஷயானந்தமெனப்படும் என்று விஷயானந்தமாகிய காமத்தின் லக்ஷணத்தைக் கூறும் ஸித்தாந்தலேசஸங்கிரஹ வசனத்திலும் ஸுகிருதமாகிய தர்மத்தால் ஸாக்ஷாத்தாக விஷயங் ளாகிய அர்த்தம் ஏற்படுகின்றது என்றும் பிறகு அவ்விதமாகிய அர்த்தத்தின் ஸம்பந்தத்தால் ஏற்படும் உத்கர்ஷாபகர்ஷங்களோடு கூடிய ஸத்துவகுண பரிணாமங்களான மனோவிருத்திகளில் பிரதி பிம்பித்த ஸ்வரூபானந்தமாகிய விஷயானந்தமெனப்படும் காமம் பரம்பரையாக ஏற்படுகின்றது என்றும் ஸ்பஷ்டமாகக் கூறப்பட் டிருக்கிறது. ஆகையால் தர்மம் அர்த்தத்தின் துவாராவாகக் காமத்தை உண்டுபண்ணுகிறது என்பது ரொம்பவும் பொருத்த முடையதே இவ்விதம் அர்த்தமானது தர்மம் காமம்இரண்டுக்கும் நடுவில் உள்ளதாய்

तज्जन्यत्वेसतितज्जन्यजनकोऽव्यापारः ॥

"காரணத்தாலுண்டாகிக் காரணத்தாலுண்டாகும் பலத்திற்குக் காரணமாயுள்ளது வியாபாரமெனப்படும்" என்கிற வியாபாரமெ ன்னும் துவாரகாரணத்தின் லக்ஷணப்படி தர்மத்தாலுண்டாகித் தர்மத்தாலேற்படும் காமத்திற்குக் காரணமாக அர்த்தமிருப்பதால் அவ்வித அபிப்பிராயத்தைக்காட்ட அதை நடுவில்போட்டு தர்மம் அர்த்தம் காமம் என்று பெரியோர்கள் கிரமம் கூறுவதுரொம்ப வும் பொருத்தமுடையதே.

(தொடரும்)

போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்.

---

## ஓர் சங்கா ஸமாதானம்.

जीवानां दृषदादिमत्त्वमयतां स्वर्गापवर्गास्पदं
देहं दत्तवति श्रियः प्रियतमे नैवोपकारस्मृतिः ।
दुःखे जातुचिदागते स्वकलिताद्दुष्कर्मणः पाकमा
नाथे हन्त निरागसि व्यसनिभिर्नैर्घृण्यमारोप्यते ॥

கல்முள் செடி கொடி முதலிய ஸ்தாவர ஜன்மங்களைத்தான் செய்தவினையின் பயனாக அடைந்து கஷ்டப்படும் ஜீவராசிகளுக்கு ஸ்வர்க்கம் அபவர்க்கம் (மோக்ஷம்) இவைகளை அடைந்து ஸுகப் படுவதற்கு ஆஸ்பதமாயுள்ள மனுஷ்ய சரீரத்தைக் கொடுத்து உதவி புரிந்த ஸ்ரீ பதியாகிய பரமாத்மாவினிடத்தில் இவர் நமக்கு உபகாரம் செய்தவர் என்னும் நினைவாகிய கிருதஜ்ஞதை மனுஷ்யர்களுக்கில்லை. ஏதாவது ஓர் ஸமயத்தில் தம்மால் செய்யப்பட்டு பயனைக்கொடுக்க அபிமுகமாய் பரிபக்குவமாயுள்ள பாபமாகிய துஷ்கர்மத்தால் துக்கம் தமக்கு நேருமாகில் அவ்வித துக்கத்தால் கஷ்டப்படுகிற மனுஷ்யர்களால் ஒருவித குற்றமுமில்லாத ஸர்வ ஜகத்துக்கும் நாதனாகிய பரமாத்மாவினிடத்தில் இவர் கொஞ்சம் கூட தயையில்லாதவர் நம்மை இவ்விதம் கஷ்டப்படும்படி செய்கின்றாரே பாழாய்ப்போகிற தைவம் இவ்விதம் துன்பப்படுத்துகிறதே இது நாசமாய்ப்போகாதாவென்று ஆக்ரஹத்துடன் தயையில்லாத்தன்மை அனுவச்யமாகச் சுமத்தப்படுகின்றது கஷ்டம் என்று விசுவகுணாதர்சமென்னும் கிரந்தத்தில் ஓர் சுலோகம் கூறப்பட்டிருக்கிறது.

இந்த சுலோகத்தில் ஓர் சங்கை. அதாவது—இந்த சுலோகத்தில் ஸ்வர்காபவர்கங்களுக்குக் காரணமாயுள்ள மனுஷ்ய சரீரம் ஈசுவரனால் கொடுக்கப்பட்டது. அதனால் அவர் நமக்கு உபகாரம் செய்தவர் அந்த சரீரம் நம்மால் ஸம்பாதிக்கப்பட்டதன்று. அந்த சரீரத்தை அவர் நமக்குக் கொடுப்பதற்குமுன் நாம் தாமாகக் கல் முள் செடி கொடி முதலிய ஜன்மங்களை அடைந்து கஷ்டப்பட்டுச்கொண்டிருந்தோம். அவ்விதம் நாம் கஷ்டப்படாமல் இருக்கும்படி நமக்கு மனுஷ்ய சரீரத்தைக் கொடுத்து பகவான் செய்த உபகாரத்தை நினைத்து நாம் பகவானைக் கருணாமூர்த்தியென்று வாழ்த்திக் கிருதஜ்ஞதை பாராட்டவேண்டாமா என்று நாம் செய்த புண்ணிய கர்ம பலன்களாகிய மனுஷ்யஜன்மம் முதலியது ஏற்படுவதில் பகவானுக்கு ஸ்வாதந்த்ரியமும் நமக்கு அதில் ஸ்வாதந்திரியம் இல்லை என்பதும் கூறப்பட்டிருக்கிறது. அவ்விதமே சில ஸமயம் மனுஷ்ய ஜன்மாவிலேயே நம்மால் அனுபவிக்கப்படும்துக்கமெல்லாம் நாம்செய்த பாபகர்மத்தின் பயனாக வந்தது. அது நம்மாலேயே ஸம்பாதிக்கப்பட்டது. அது பகவானால் கொடுக்கப்பட்டதன்று. அதில் பகவானுக்கு

ஸம்பந்தமில்லை. அதனால் பகவானிடத்தில் இவர் தயையில்லாத வர் என்று குறைகூறக் காரணமில்லை. அவ்விதம் குறைகூறுவது நம்முடைய புத்தியில்லாத்தனம். என்று பாப கர்ம பலன்களாகிய துக்கம்முதலியது ஏற்படுவதில் பகவானுக்கு ஸ்வாதந்திரியம் இல்லை என்றும் நமக்குத்தான் அதில் ஸ்வாதந்திரியம் என்றும் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதம் கூறுவது உசிதமன்று. ஏனெனில் ஈசுவரனுக்குஸ்வாதந்திரியம் சொன்னால்புண்யபலமாகிய ஸுகம் பாபபலமாகிய துக்கம் இரண்டிலும் சொல்லவேண்டும். அப்பொழுது ஈசுவரனிடத்தில் நமக்கு அகாரணமாய் துக்கத்தைக்கொடுத்ததால் நைர்கிருண்யம்(தயையில்லாத்தன்மை) வரத்தான் வரும். அப்பொழுது அவரைக்குறைகூறுவது உசிதமே. அவருக்கு ஸ்வாதந்திரியம் இல்லை அதில் நமக்குத்தான் ஸ்வதந்திரியம் என்று சொன்னால் புண்யபலமாகிய ஸுகம் பாபபலமாகிய துக்கம் இரண்டிலுமே நமக்கு ஸ்வாதந்திரியம்சொல்லவேண்டும். அப்பொழுது நாமே புண்யகர்மத்தினால் இந்த மனுஷ்ய ஜன்மத்தை ஸ்வதந்திரமாக அடைந்திருக்கிறதாக ஏற்படுவதால் அதில் ஈசுவரனுக்கு ஸம்பந்தமில்லாததால் அவர் உபகாரம் செய்தவர் என்று அவரிடத்தில் நாம் நன்றிபாராட்டுவதாகிய கிருதஜ்ஞதை நமக்கு வேண்டுமென்று சொல்லுவதெப்படிப்பொருந்தும் புண்ணிய பலத்தில் ஈசுவரனுக்கு ஸ்வாதந்திரியம் பாப பலத்தில் நமக்கு ஸ்வாதந்திரியம் ஆகையால் பகவான் உபகாரிதான் துக்கத்தை நாமாக ஸம்பாதித்துக்கொண்டபடியால் பகவான் நிர்கிருணருமன்று என்று ஸுகம் துக்கம் இரண்டுக்குள் ஒன்றில் பகவானுக்கு ஸம்பந்தமும் ஒன்றில் ஸம்பந்தமில்லாமையும் கூறுவது பாதிச் சுரைக்காய் கரிக்கும் பாதி சுரக்காய் விதைக்கும் என்று கூறுவதாகிய அர்த்தஜாதீய நியாயமாய் முடியுமன்றோ. குதிரை கொள் என்றால் வாயைத் திறப்பதும் கடிவாளம் என்றால் வாயை மூடுவதும்போலல்லவா இது இருக்கின்றது. ஆகையால் இந்த சுலோகத்தில் சொல்லப்பட்ட விஷயம் பொருத்தமுடையதன்று. என்று ஆசங்கை. இதற்கு ஸமாதானம் கூறுவாம்.

அந்த சுலோகத்திற்கு ஈசுவரன் ஸ்வதந்திரமாய் நல்ல பலன்களைக்கொடுக்கிறார் என்றும் கெட்ட பலன்களை நாமே ஸ்வதந்திரமாய் ஸம்பாதித்துக்கொள்ளுகிறோம் என்றும் ஸித்தாந்தம் செய்வதில் கருத்தில்லை. பின்னையோவெனில் துக்கத்தை

அனுபவிக்கும்பொழுது அது ஈசுவரனால் ஸ்வதந்திரமாகக் கொடுக்கப்பட்டது என்று நினைத்து அவரை தயையில்லாதவரென்று நிந்திக்கும் மனுஷ்யர்களைப்பார்த்துத் தாங்கள் நாம்செய்த பாபத்தின் பலனாக நமது பாபத்தை அனுஸரித்து நமக்கு இந்ததுக்கம் ஈசுவரனால் கொடுக்கப்பட்டது என்று நினைப்பீர்களானால் ஈசுவரனை நிந்திக்கமாட்டீர்கள். தம்மையே ஏன் இந்த பாபத்தைச் செய்தோம். அதன் பலமாகிய துக்கத்தை

नाभुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि ॥

"செய்த கர்மம் அதன் பலன் அனுபவிக்காதவரையில் அநேகம் கல்பகோடிகளானாலும் நசிக்காது" என்றபடி அனுபவித்துத் தானே தீரவேணும். நாம் செய்த குற்றத்திற்குத் தகுந்தபடி ஈசுவரன் நம்மைத் தண்டிக்கிறார். அவர்பேரில் என்னகுற்றம் आत्मैवारिपुरात्मनः "தானே தனக்குச் சத்துரு" என்ற கீதையின் வசனப்படி நாமே பாபத்தைச்செய்து நமக்குச் சத்துருவாய்க் கொண்டோம், என்று தன்னையே நிந்தித்துக்கொள்ளுவீர்கள். அவ்விதமில்லாமல் எப்பொழுது ஈசுவரனை நிந்திக்கிறீர்களோ அப்பொழுது ஈசுவரனே நமது கர்மம் முதலிய ஒன்றையும் அபேக்ஷிக்காமல் நமக்கு ஸ்வதந்திரமாய் துக்கத்தைக்கொடுத்திருக்கிறார் என்று நினைத்துக்கொண்டு நிந்திக்கிறீர்களென்று தெரிகிறது. அப்பொழுது தாங்கள் இவ்விதம் ஈசுவரனை நிந்திப்பதுபோல் தங்கள் அபிப்பிராயப்படி ஒரு ஸமயம் ஈசுவரனைப் புகழவும்வேண்டிவரும். ஏனெனில் ஸ்வர்கம் அபவர்கம் முதலியதை அடைந்து சுகமாயிருக்க ஹேதுவான இந்த மனுஷ்ய சரீரத்தை ஈசுவரன் நமக்கு நாம் செய்யும் கர்மம் முதலிய ஒன்றையும் அபேக்ஷிக்காமல் கொடுத்திருக்கிறாரே ஈசுவரனுக்கு நம்மிடத்தில் என்ன அவ்யாஜமான கருணை, நாம் திர்யக் ஜன்மங்களை அடைந்திருந்தால் ஸ்வர்காதிகளை நாம் அடையஹேது உண்டா? ஆகையால் ஈசுவரனைப்போல் அவ்யாஜ கருணாமூர்த்தி கிடையாது என்று பகவானை ஸ்துதிக்கவேண்டாமா. அப்படி ஏன் ஒரு ஸமயமாவது பகவானை ஸ்துதிக்கமாட்டேனென்கிறீர்கள். தங்கள் அபிப்பிராயப்படி ஈசுவரனே ஒன்றையுமே அபேக்ஷிக்காது துக்கத்தைக்கொடுத்ததுபோலத்தானே மனுஷ்ய ஜன்மத்தையும் கொடுத்திருக்கிறார். ஆகையால் அவரிடத்தில் உபகாரம்செய்தவரென்று

நினைவாகிய கிருதஜ்ஞதை அவச்யம் வேண்டியதுதானே அது ஏன் தங்களுக்கு இல்லை. இந்த மனுஷ்ய ஜமன்மானது எனது புண்ணிய கர்மத்தால் நானாக ஸம்பாதித்துக்கொண்டது அது ஈசுவரனால் கொடுக்கப்பட்டதில்லை. ஆகையால் எனக்கு ஈசுவரனை ஸ்துதிக்கவேண்டிய அவச்யமில்லை என்பீர்களானால் அப்பொழுது தாங்கள் அனுபவிக்கும் துக்கமும் தாங்களே ஸம்பாதித்துக்கொண்டது ஈசுவரனால் கொடுக்கப்பட்டதில்லை. ஆகையால் ஈசுவரனிடத்தில் ஒருவித குற்றமுமில்லை. அப்படியிருக்க ஏன் ஈசுவரனை தயையில்லாதவரென்று குற்றம் சாட்டுகிறீர்கள். ஸுகமெல்லாம் தாங்கள் ஸம்பாதித்துக்கொண்டது துக்கம் மாத்திரம் ஈசுவரனால் கொடுக்கப்பட்டது என்கிற அர்த்த ஜாதீயம் என். என்று இவ்விதம் விகல்ப பூர்வமாகக் கேள்வி கேட்டு பதில் சொல்வதில் இந்த சுலோகத்திற்குத் தாத்பர்யம். ஆகையால் இந்த சுலோகத்தில் சொல்லப்பட்ட விஷயம் பொருத்தமுடையதே.

ஆதலால் ஜீவராசிகள் செய்த புண்யபாபங்களுக்குத்தக்கவாறு ஸுகதுக்கங்களைக் கொடுக்கும் ஸ்வபாவமுடையவருமதனாலேயே வைஷம்யம் நைர்கிருண்யம் முதலிய குற்றமற்றவரும் தன்னை உபாஸித்தவர்களுக்கு அவ் வுபாஸனானுஸாரமாக ஸகலசிரேயஸ் ஸுகங்களையும் கொடுக்கும் பரம உதாரஸ்வ பாவம் நிரதிசயமான கருணை முதலிய நல்ல குணங்கள் அமைந்தவருமான பகவானால் தமது ஆக்ஞாரூபமாய் வெளியிடப்பட்ட சுருதி ஸ்மிருதி முதலியவற்றில் விலக்கப்பட்ட நிஷித்த தர்மங்களைச் செய்து அதனால் துக்கங்களை மென்மேல் அடையாமல் சுருதி ஸ்மிருதிகளில் செய்யுமாறு சொல்லப்பட்ட கர்மங்களைச் செய்ததினாலேயே நமக்குக்கிடைத்த இந்த மனுஷ்ய ஜன்மத்தில் இனிமேலும் கீழே போகாமலிருக்கும்படி சுருதி ஸ்மிருதிகளில் சொல்லிய ஸத்கர்மங்களையே இனியும் செய்து,

स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विंदति मानवः ।

"தனது வர்ணாசிரம தர்மத்தால் ஈசுவரனைப் பூஜித்து மனுஷ்யன் சிரேயஸ்ஸை அடைகிறான்,, என்ற கீதாவசனப்படி ஸ்வதர்மத்தால் ஈசுவரனைப் பூஜித்து அவரது அனுக்கிரஹத்தால் நாம் எல்லோரும் ஐஹிகாமுஷ்மிக சிரேயஸ்ஸுகங்களையும் முடிவில் நிரதி

சயமான சிரேயஸ்ஸாகிய ஸ்வாராஜ்யஸுகத்தையும் அனுபவிப்போமாக. சுபம்

போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்.

---

## ஹிந்து மதாபிமான ஸங்கம், நாகப்பட்டணம்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்காசார்யஸ்வாமிகள் அவர்களுடைய அனுக்ரஹத்தை முன்னிட்டு சென்ற ஆவணிமீ 5௳ சுக்ரவாரம் மாலை 7-மணிக்கு ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் 40-வது வருஷபூர்த்தி உத்ஸவமானது உபக்ரமம் செய்யப்பட்டு மூன்று தினங்கள் வெகு விமரிசையாக நடைபெற்றது. திருவடமருதூர் ரிடையர்டு தாசில்தார் பிர்மஸ்ரீ K. ராமச்சந்திர அய்யர் அவர்கள் அக்ராஸனம் வகித்து ஆத்ம ஞானம் என்ற விஷயத்தை வெகு அழகாக உபன்யாஸம்செய்து ஸமாஜத்தை வெகு விமரிசையாக நடத்தினார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில் ஸங்கத்திற்கு பூர்ணமான அனுக்ரஹத்தை செய்துவரும் ஸ்ரீஸ்வாமிகள் அவர்களால் ஆஸ்தான வித்வான் பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதிபூஷண வரகூர் பிரும்மஸ்ரீ V. S. வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களை அனுப்பிவைக்கப்பட்டு அவர்களால் குருபக்தி ஆஸ்திக்யம் என்னும் விஷயங்களைப்பற்றி வெகு அருமையான உபன்யாஸங்கள் நடைபெற்றன. மஹா பிரும்மஸ்ரீ M. K. கணேச சாஸ்திரிகள் அவர்களும் வந்திருந்து சித்தஜயம் உபனிஷதங்களின் லக்ஷ்யம் என்ற இரு உபன்யாஸங்களும் வெகு தெளிவாகவும் அருமையாகவும் செய்தார்காள். நாகையில் ப்ரஸ்தானத்ரய பாடம் நடத்திவரும் தியாகசமுத்திரம் பிரம்மஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள் அவர்கள் கர்மயோகம் என்ற விஷயத்தை உபந்யஸித்தார்கள். ரெங்கநாதபுரம் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் அவர்கள் தப்ரபக்த சரித்ரமென்று சொல்லப்படும் சிறுத்தொண்டர் சரித்திரத்தை வெகு ஆனந்தகரமாக உபந்யஸித்தார்கள். சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் அவர்கள் நம்முடைய மதத்தின் ரக்ஷணத்திற்காக நாம் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றி உபன்யஸித்தார்கள்.

கோமல் ஸ்ரீ-உப-வே சேஷாத்ரி அய்யங்கார் அவர்கள் விச்வாமித்ராகமனம் என்ற விஷயம் உபன்யசித்தார்கள். நாகை நீலலோசனி பத்திராதிபர் ஸ்ரீமான் சதாசிவம்பிள்ளை அவர்களால் மூன்று கனவுஎன்ற விஷயம் உபன்யசிக்கப்பட்டது. வெகுஊக்கத்துடன் ஸநாதன தர்மபிரசாரம் நடத்திவரும் திருக்கருகாவூர் பிர்ம ஸ்ரீ T.L சுப்பய்யர் அவர்களும் விஜயம் செய்து தற்காலம் ஸநாதனதர்மம் அடைந்திருக்கும் நிலைமையும் அது மறுபடி முன்னேற்றமடைய வேண்டியதற்குள்ள உபாயங்களைப் பற்றியும் உபன்யசித்தார்கள். கடைசியில் மன்னார்குடி பிர்ம ஸ்ரீவேம்பு சாஸ்திரிகள் அவர்களால் எல்லோருடைய மனதையும் கவரும்படியான சாரீர ஸம்பத்தியுடன் ஸ்ரீராமசந்த்ர பட்டாபிஷேகமானது வெகு அழகாக உபன்யசிக்கப்பட்டது. முடிவில் காரியதர்சி அவர்கள் ஸங்கத்தின் விமரிசைக்குக் காரண பூதமாக இருந்து கடாக்ஷித்துவரும் ஸ்ரீஸ்வாமிகள் அவர்களுடைய திவ்ய சரணாரவிந்தங்களில் அசேஷமகா ஜனங்களுடைய சாஷ்டாங்க நமஸ்காரங்களை சமர்ப்பித்து வெகு ஆதரவுடனும் ஸௌலப்யத்துடனும் சபைக்கு விஜயம்செய்து வெகு அருமையானஉபன்யாசங்களை நடத்திக்கொடுத்த வித்துவான்களுக்கு வந்தனோபசாரங்களை தெரிவித்தார்கள்.

N.சாம்பசிவ அய்யர்

---

# ஆஸ்திகப்பெண்மக்களுக்கு

புராதந தர்மமார்க்கத்திலிருந்து நம் பெண்மக்களையகற்றிவிடச்சில நவீன ஸ்திரீகளாலும் திருத்தக்காரர்களாலும் செய்யப்பட்டுவரும் கிளர்ச்சிகளையும் அவைகளின் தீதிகளையும் சென்ற இதழில் சிறிது கவனித்தோம். பின் முடிவில் இன்னும் எத்தகைய தீங்குகள் நம் ஆஸ்திகப்பெண்மக்களின் முன்னிலையில் வாக்காத்திருக்கின்றனவென்பதையும் அவைகளை வெல்லத்தகுந்த உபாயங்களையும் இப்பத்திரிகையில் ஆராய்வதாகக் கூறப்பட்டு இருந்தது.

ஒரு விஷயம் மட்டும் இச்சமயம் குறிப்பிடவேண்டியிருக்கிறது. சாதாரணமாக நாம் சென்ற இதழில் விவரிக்கப்பட்டிருந்த

வண்ணம் பல தீங்குகள் கணக்கற்றவைகளாகப் பல துறைகளி லும் குவிந்து கிடக்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் இப் பொழுது எடுத்துரைக்க முற்பட்டால் இவ்வெல்லாக் கெடுதல் களையும் வளர விடாமல் தடுக்க நினைத்திருக்கும் உபாயங்களை சீக்கிரம் வெளியிடமுடியாமல் போய்விடும். ஆகையால் சுருக்கமாக இரண்டு விஷயங்களைமட்டும் சுட்டிக் காணபித்துவிட்டுப் பின் நம்மால் செய்யப்படவேண்டிய காரியங்களின் திட்டங்களைக் கூறுகிறேன். எத்தனைவிஷமங்கள் நடை பெற்றாலும் ஆண்மக்க ளிடமாயினும், பெண்மக்களிடமாயினும், அவைகளெல்லாம் அடிப் படையாக ஒரேவிதமான நோக்கத்தை உடையதாயிருக்கின்றது. அதாவது நமது ஸனாதன தர்மக்கொள்கைகளில் நம்பிக்கை இல் லாமல் செய்துவிட வேண்டும் என்றஒரே கருத்தையே உடைய வைகளாயிருக்கின்றன. இந்த நோக்கத்தை நிறைவேற்றிவைக் கத்தான் அத்தனை விநோத முறைகளும் கையாளப்பட்டு வருகின்றன.

ஆகையால் இந்த விபரீதங்கள் நம்மவர்களுடைய மனதிலும் பழக்க வழக்கங்களிலும் தலையிடாவண்ணம் பாதுகாக்க இரண்டு உபாயங்கள் உடனே கவனிக்கப்படவேண்டும். இளம்பருவத் தில் நல்ல விதமான கல்வி முறையும் நற்பழக்கங்களும் ஏற்பட் டால்தான் பிற்காலத்தில் நமது தர்மத்தில் சிரத்தையும், நம்பிக் கையும் அவைகளை அனுஷ்டிப்பதில் ஊக்கமும் சௌகரியமும் ஏற்படும். நம் பெண்மக்களுடைய விஷயத்தில் ‘முதலாவது அவர்களை நமது வைதிக முறைக்கு அனுகூலமில்லாத போதனா முறைகளையும், ஸாஹஸங்களையும் உடைய கல்விச்சாலைகளுக்கு, அவைகள் அந்நிய மதத்தினருக்குச் சொந்தமாயினும் சரி நம்மு டைய மதத்தினரின் பெயரால் நடத்தப்பட்டு வருபவைகளாயி ருந்தாலும் சரி, நமது பெண் குழந்தைகளை அனுப்புவது கண்டிப் பாய் நிறுத்தப்படவேண்டும். விவாஹ வயது வந்ததும் வெளிப் பழக்கத்தை அவர்களுக்குக் குறைத்துவிடவேண்டும். வீடுகளி லேயே குடும்பகாரியங்களையும் அவைகளின் ஒழுங்கைப் பின் பற்றுவதிலும் தாயண்டை பயிற்சி செய்துகொள்ளவேண்டும். இவ்விரண்டுதான் முக்கியமான நிபந்தனைகள்.

“ தார்மிக ஹிந்து. ”

# ஓர் விக்ஞாபனம்.

இவ்வருஷம் காயத்திரீஜப விஷயமாய் சில சங்காஸமாதா னங்கள் முன்னிரண்டு ஸஞ்சிகைகளில் வெளியிடப்பட்டன. அது விஷயமாய் அநேக வாக்கியார்த்த விசாரங்கள் நடந்து கொண்டிருந்ததால் அதன் ஸித்தாந்தத்தை 30-வது ஸஞ்சிகையில் வெளியிடுவதாக 29-வது ஸஞ்சிகையில் குறிப்பிடப்பட்டிருந்ததை அநுஸரித்து ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்களின் தற்காலத்திய விஜயயாத் திரா முகாமாகிய ஒத்தூரில் ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில் இதற்காக வென்றே நடத்தப்பட்ட ஸபையில் தீர்மானித்தபிரகாரம் இவ் வருஷத்திய காயத்திரீ ஜபத்தை நாளது ஆவணிமீ 12உ வெள்ளிக் கிழமைதினமே எல்லோரும் அநுஷ்டிக்கவேண்டியதாக ஸித்தாந் தப்படுத்தப்பட்டிருக்கிறது. அப்படியே எல்லோரும் அநுஷ்டிக்க வேண்டியது. ப-ர்

# ஓர் அறிவிப்பு.

இவ்வருஷத்தில் உபாகர்ம காலவிஷயமான ஸித்தாந்தம் முடிகொண்டான் கிராமத்தில் நடந்த கும்பகோணம் அத்வைத ஸபாபண்டிதர்களின் தீர்மானப்படி ஆஷாடியில் என்று வெளி யிடப்பட்டது. அதன்படி அநேகர் அநுஷ்டித்திருக்கிறார் கள். சிலர் அப்படி அநுஷ்டித்தது சரியல்லவென்றும் மறுபடி சிராவணியில் அநுஷ்டிக்க வேண்டுமென்றும் ஆங்காங்கு சொல் லிக்கொண்டிருப்பதாகவும் இதைக்கேட்டு ஆஷாடியில் அநுஷ் டித்த சிலர் சந்தேகப்படுவதாகவும் நமது செவிக்கெட்டியது. ஆஷாடீநிர்துஷ்டகாலமென்று நிரூபித்திருக்கிறபடியால் ஆஷாடி யிலநுஷ்டித்தது சரியே. இதுவிஷயத்திலநுஷ்டித்தவர்கள் ஸந்தே கிக்கவேண்டியதில்லை. சிராவணியில் அநுஷ்டிப்பவர்களானயாஜு ஷர்கள் நிர்துஷ்டகாலாதிக்கிரமணதோஷத்திற்காகவும் சாகாதீச மௌட்யத்திற்காகவும் பரிஹாரத்தைச் செய்துகொண்டு சாந்தி பூர்வகமாக அநுஷ்டிக்கவேண்டியது. இதைப்பற்றிய பெரிய தோர் விசாரம் அடுத்த ஸஞ்சிகைமுதல் வரும். ப—ர்.

# வாரவிருத்தாந்தம்.

நாம் சொன்னபடி ஆடுமா? தன்னை அறியாமலே தற்கால தேசிய வாதிகள் கள் குடிக்கும் பாபத்தை நீக்க வழிதேடுகின்றனர். இதில் மதஸம்மதமிருக்கெனில் ஓர் ஸமயம் இதையும் விடுவரோ? நாமறியோம். தேசீயவாதிகளிலே சிலர் அன்னிய தேச மதுவை அருந்துவதுடன் சிகை உடை ஆசாரம் முதலிய விஷயங்களிலும் அன்யருக்கு அடிமையாயிருக்கின்றனர். இதையும் விலக்கி பெரியமனிதர் நாகரீகமான ஹோட்டல்களில் மது பானம் செய்வதையும் மறியல் செய்தால் மிக நலம். தென்னாட்டுத்தலைவர் ஒருவர் கோவில் மாங்களைக் கள் குத்தகைவிடுவது பாபம். இதைக்கடவுள் பொறுத்திருக்கிறார். பின்னர் சிக்ஷிப்பர் என பேசினார். இக்கடவுள் தனதாக்ஞையான வர்ணாச்ரமத்தை மீறி பல அக்ரமங்களைச்செய்யும் இவர்களைச் சும்மா விடுவாரா? இதை ஏன் இவரறியவில்லை.

அதர்மத்தால் அல்லல்:— புதுக்கோட்டையில் நடந்த தீங்கிற்கு காரணம் யாதென அறிய அரசாங்க விசாரணை நடந்து வருகிறது. ஓர் சட்டசபை அங்கத்தினரது சாக்ஷியத்தில் "சுயமரியாதை என்ற பெயரால் நடந்த அதர்மப்ரசாரமே இதற்குக்காரணம்" என நன்கு விளங்குகிறது. இனியேனும் தேசத்தில் அமைதியுண்டாக்க அதர்மப்ரசாரத்தை அறவே அகற்ற வேண்டுமென அரசாங்கம் உணர்ந்து முன் எச்சரிக்கையாயிருக்குமா?

நூற்றுக்கு ஐந்தா? திருச்சியில் பெண்கள் கிளப்பில் தங்களுக்கு 100-க்கு 5 ஸ்தானம்போதுமா? போதாதா? என வாதம் நடந்து முடிவில்லாமல் வாதம் முடிந்ததாம், ஒருஸ்திரீ இருந்தே தர்மம்பட்டபாட்டை ஆஸ்திக உலகம் நன்கறியும். ஐந்து அல்லது அதிகஸ்தானம் கிடைத்தால் கலிராஜன் களிகொள்வான். ஈசனாணை என்னென்று பார்ப்போம்.

எது விபரீதம்? பாம்பே ஸர்வகலாசாலையில் பட்டமளிக்கும் போது உப அத்யக்ஷர் ஓர் உபன்யாஸம் செய்தார். நம்நாட்டுப் பழய கல்வி நாகரீகமுள்ளதாம். பாரமார்த்திகத்தை போதிப்பதாம். அது தற்காலத்தில் விபரீதபயனையளிக்கும் என்கிறார்,

அச்சமயம் தலைமைவஹித்த கவர்னரது கடாக்ஷத்தைநாடி அல்லது உண்மையை உணராமல் இவர் கூறிய தன்றோ விபரீதம்

மஹா மூடர்:—பவல்பூர் ஸமஸ்தானத்தில் ஒருவர் தன் வீட்டில் உட்கார்ந்து ஜபம் செய்யும்போது ஓர் மஹம்மதியர் கோடாரியால் இவர் தலையை வெட்டினார். உடனே இக்கொலைக் காரனைப்பிடித்து சிறையிலடைக்கும்போது பல மஹம்மதியர் மாலை சூட்டினராம். இம்மூடச்செயலுக்கு இவர் உடந்தையாயிருப்பது மஹாமௌட்டியமன்றோ? இங்ஙனம் வெறிகொண்டோரைத் தக்கபடி சிக்ஷிக்கவேண்டும்.

விஷ்ணு திகம்பரர்:—வடநாட்டில் வர்ணாச்ரம வ்யவஸ்தை குறைந்து நாளுக்குநாள் அன்யதேச அனுசாரம் விருத்தியாகிறது. அங்கு ராஜஸபக்திக்குக்கொஞ்சம் அதிக அவகாசமுமுண்டு. ஸங்கீதம் தற்காலம் கேவல காதுக்குறிய விருந்தாகவே எண்ணப்பட்டு அர்த்தமில்லாமல் பாடப்படுகிறது. இச்சமயத்தில் வடநாட்டிலிருந்து ஸ்ரீ ராமதாரக மந்திரத்தை "ரகுபதி ராகவ" என்பதை எங்கும் பாடும்படிசெய்து பெரிய கச்சேரி நடுவில் ஸதஸ்ஸிலுள்ளோரையும்சொல்லும்படிசெய்தவர் விஷ்ணுதிகம்பரர்.இன்றுவிட்டு அவர்நன்னாடுசென்றதைக்கேட்டுஆஸ்திக உலகம் ஆயாஸப்படாமலிராது. அவரைப்பின்பற்றி ஸங்கீத வித்வான்களென்போர் பக்தியைத் தழுவுவாரா?

ஜலக்கடவுளின் மறக்கருணை:—சீனாவில் வெள்ளத்தின் பயனாக 20-லக்ஷம் ஜனங்கள் மாண்டனராம். மற்றும் பல கிராமங்களும் அழிந்தன. அஷ்டமூர்த்தியின் ஓர் உருவமான ஜலம் இங்ஙனம் ஸம்ஹாரமூர்த்தியாய்த்தோன்ற அதர்மமே காரணம். ஆதலின் தர்மத்தை அவலம்பித்து நன்மை புரிக.

வரவேற்போம்:—கோள மஹம்மதிய ஸபையில் ஓர் பெரியார் தலைமைவஹித்து அழகாக ஓர் உபன்யாஸம் செய்தார். இயற்கையான மூர்க்ககுணத்தைவிட்டு சாந்தமாக மதப்படிப்பை நன்றாகப்படித்து ஒற்றுமையாக வாழவேண்டுமென உபதேசித்தார். இங்ஙனம் மற்றவரும் போதித்தால் இயற்கையான துர்க்குணத்தை அவர் விடுவர். சண்டை குறையும்.

வே. ஸோமதேவ சர்மா